2021 பிப்ரவரி 26]

தொகுதியில் அதிகமான பணிகள் செய்யப்பட்டுள்ளன. புதிய திட்டங்கள் எல்லாம் அதிகமான அளவில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. பாதாள சாக்கடைத் திட்டத்தில் 5 ஆண்டுகளுக்கு பராமரிப்புப் பணிகள் என்று இருந்ததை ஓராண்டாகக் குறைத்துள்ளதாகத் தெரிவித்திருந்தார்கள். அதை எதனால் குறைத்தார்கள் என்பது என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. கண்டிப்பாக துறை அதிகாரிகளிடம் கேட்கப்படும். தமிழகத்தில் 528 பேரூராட்சிகள் இருக்கின்றன. ஒரு சில பேரூராட்சிகளைத் தவிர மற்ற பேரூராட்சிகளில் எல்லாம் வருமானம் குறைவாகத்தான் இருக்கின்றது. எனவே, மீண்டும் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

34—

நீதிமன்றம்

***52137—திருமதி ம. கீதா:**

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் பகுதியில் நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கிருஷ்ணராயபுரம் தொகுதியில் உள்ள கடவூர் வட்டத்தில் நீதிமன்றம் அமைப்பதற்கு இந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[*2021 பிப்ரவரி 26*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.*

திருமதி ம. கீதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைதி, வளம், வளர்ச்சி என்ற தாரக மந்திரத்தை உச்சரித்து, மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்று வாழ்ந்து, மறைந்து, இந்தத் தமிழ்நாட்டு மக்களைக் காக்கும் கடவுளாக, குல சாமியாக, வாழ்ந்துகொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இளைஞர்களின் எழுச்சி நாயகன், மாணவர்களால் தலைவா என்று அன்பாக அழைக்கப்படும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், என்னுடைய மாவட்ட அமைச்சர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன்.*

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரம் பேரூராட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள், மக்களின் நலன் கருதி ஒரு மாவட்ட உரிமையியல் மற்றும் நடுவர் நீதிமன்றம் அமைத்ததற்கு தங்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அதற்கு பரிந்துரை செய்த எங்களுடைய மாவட்ட மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், கிருஷ்ணராயபுரம் தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, கடவூர் ஒன்றியத்திலும் நீதிமன்றம் அமைக்கப்படும் என்று ஒரு நல்ல பதிலை அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, தொகுதி மக்களின் சார்பாக மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன், நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ.செ. வில்வநாதன், மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*